# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

04.08.2023

**<u>கேள்வி:-</u>**

அ) நியாயபந்து திட்டத்தின் கீழ், போனோ கிளப் எனப்படும் இலவச சட்ட ஆலோசனை மையங்கள் நாடு முழுவதும் உள்ள எண்ணிக்கை எத்தனை?

ஆ) புரோ போனோ கிளப் எனப்படும் இலவச சட்ட ஆலோசனை மையங்களுக்கு, நீதித்துறை அதிகாரிகள் தவறாமல் வருகை தந்து, அதன் செயல்பாட்டை மதிப்பீடு செய்கிறார்களா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன? மற்றும்

இ) 2021 முதல் புரோ போனோ கிளப் எனப்படும் இலவச சட்ட ஆலோசனை மையங்களில், நிலையான செயல்பாட்டு நடைமுறையை உருவாக்க சட்டக்கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

**<u>மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் பதில்</u>**

அ)விலிருந்து இ) வரை: இந்திய அரசு, நீதித்துறையானது, கடந்த 2020 ஆம் ஆண்டில் புரோ போனோ கிளப் திட்டத்தை, இளம் சட்டம் பகும் மாணவர்களின் மனங்களில், இலவச சட்ட சேவைகளின் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு அறிமுகப்படுத்தப்பட்டது.

2020 ஆம் ஆண்டு முதல் 89 சட்டப் பள்ளிகளில் இந்த திட்டம் செயல்படுகின்றன. இதை மதிப்பீடு செய்வதற்காக சட்ட அதிகாரிகள் அவ்வப்போது அங்கு சென்று, அங்குள்ள உறுப்பினர்களுடன் ஆலோசனை வழங்குகின்றனர். மேலும், பல்வேறு நிகழ்ச்சிகள் மாதாந்திர கூட்டம் நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ நடத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற சட்டப் பள்ளிகளில் நடத்தப்படும் புரோ போனோ கிளப்புகளின் கீழ், பல்வேறு செயல்பாடுகளை நடத்துவதற்கு நிலையான செயல்பாட்டு நடைமுறை உள்ளது. இலவச வழக்கு ஆலோசனை உதவிகளை வழங்குவது, ஆண்டு முழுவதும் இலவச சேவைக்காக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மணி நேரங்களை ஒதுக்குவது, சமூக சட்ட விழிப்புணர்வு முகாம்களை நடத்துவது ஆகியவற்றை இதில் உள்ளடக்கியது அருகில் உள்ள கிராமப் புறங்களில் ஆராய்ச்சி மற்றும் ஆவண படுத்துதல் பணியை மேற்கொள்வது மற்றும் தகராறு தீர்க்கும் வழிமுறையை ஊக்குவித்தல் போன்றவை. ஒவ்வொரு புரோ போனோ கிளப்பிற்கும் 2 ஆண்டுகளுக்கு மட்டும், ஆண்டுக்கு தலா 1 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுறது. ஆண்டுதோறும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஜூலை, 15, 2023 வரை இந்த சட்டக் கல்லூரிகளுக்கு ரூபாய் 1.18 கோடி வழங்கப்பட்டுள்ளது.

*****